BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

அன்னிமகள் நாடகத்தில் விழாக்கள்

முனைவர் சு. இளமாறன்
உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
நெய்யூர் , கன்னியாகுமரி- 629802.
அலைபேசி : 9787302211

ஆய்வுச்சுருக்கம்

சங்க இலக்கியங்களில் காணப்படும் சில வரலாற்று நிகழ்ச்சிக் குறிப்புகள் கால எல்லைகளைக் கடந்து நிற்கின்றன. அந்த வகையில் அன்னிமகள் என்னும் நாடகம் வரலாற்று நிகழ்வுகளைத் தாங்கி கற்பனையோடு புனையப்பட்ட நாடகமாகும். இந்நாடகத்தில் கற்பனையாகச் சில கதைமாந்தர்கள் படைக்கப்பெற்றுள்ளன. பெரும்பான்மையானக் கதைமாந்தர்கள் வரலாற்று நிகழ்வுகளோடு தொடர்புடைய மாந்தர்களாகும்.இந்நாடகம் படிப்பவர்க்கு, இலக்கியத்தின் வழி வரலாற்றுப் பார்வையைத் தூண்டுகிறது. அக்காலத்தில் கண்களைப் பிடுங்குவது என்பது ஒரு கொடிய தண்டனையாகும்.கொலையை விடக் கொடுமையான தண்டனையாகும்.கண்களைப் பறிப்பது வாழ் நாளெல்லாம் உள்ளத்தைத் துன்புறுத்தும் நிகழ்வாகும். இதனால் தான், அன்னியின் கண் களைந்த செய்தியினைப் பரணர் பாடினார். இந்நாடகத்தில் வேள் எவ்வி என்னும் கதைமாந்தர் படைக்கப்பட்டிருப்பது இன்னொரு சிறப்பாகும்.தமிழர்களின் இனஒற்றுமையைத் தன் உயிர்துடிப்பாகப் கொண்டு, அறம் பலவற்றை உரைக்கும் கதைமாந்தராக நாடகத்தில் வலம் வருகின்றார். இனத்தின் வீழ்ச்சியும் எவ்வியின் வீழ்ச்சியும் ஒன்றே என்பதனை உணரும் வண்ணம் நாடகம் படைக்கப்பட்டுள்ளது. அறத்திற்கும் மறத்திற்கும் இடையே நடந்த போராட்டத்தினை வெளிப்படுத்துகிறது. இந்நாடகத்தில் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களாக, விழாக்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. இந்திர விழா, வெற்றி விழா, ஏறுதழுவுதல் விழா, ஆகியவை குறித்தான பதிவுகள் உள்ளன.

திறவுச் சொற்கள்

அன்னிமகள், அன்னிமிஞிலி , இந்திர விழா, வெற்றி விழா, ஏறுதழுவுதல் விழா, வேள் எவ்வி, திதியன்

முன்னுரை

திராவிட இயக்கச் சிந்தனையில் ஈடுபாடு கொண்ட புலவர். ஆ. பழனி, தமிழுக்காகத் தொண்டு செய்தவர். பண்டைய தமிழ் இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகளைத் திறனாய்வு செய்து புதிய இலக்கிய வகைமைகளில் புதுமையாக்கியவர். அனிச்சஅடி, அன்னிமகள், சாலிமைந்தன், காரல் மார்க்சு, களங்கண்ட கவிதைகள், பாரதிதாசன் பாரதிக்குத் தாசனா?, பண்டிதமணியின் நாடகத்தமிழ், சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பு, பாண்டியன் பரிசில் வரலாற்றுப் பார்வை, கம்பன் காட்டும் போரற்ற உலகம், திருக்குறள் உரைகளும் சில குறைகளும் ஆகிய நூல்களைப் படைத்தவர். தூய்மையான சிந்தனையாளரான இவரின் “அன்னிமகள்” என்னும் நாடகத்தில் பயின்று வரும் பண்பாட்டு விழுமியங்களை இக்கட்டுரை சுட்டுகிறது.

அன்னிமகள்

குறுக்கை நாட்டின் தலைவன் அன்னியும் அவன் மகள் அன்னிமிஞிலியும் புகார் நகரில் நடைபெறும் இந்திரவிழாவினைக் கண்டு மகிழ்ந்தனர். அவ்வேளையில் அழுந்தூர் வேளிர் குலத் தலைவன் ததியன் அன்னிமிஞிலியைக் கண்டு அவளது அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்தான் திதியன். அன்னிமிஞிலியின் தோழி மாதரியிடம் அவனும் அவளும் தங்களது உள்ளக் குறிப்பினைப் பரிமாறிக்கொண்டனர். முல்லை நில மக்களின் குல ஒழுக்கப்படி குறுக்கையில் ஏறுதழுவும் விழா நடைபெறுகின்றது. இந்நிகழ்வில ஆடவர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர். அன்னிமிஞிலி வளர்த்த வெண்காற் காரியை, கோசர்குலக் குறுமகள் கதக்கண்ணன் அடக்கமுடியாமல் தோற்றான். ஆனால் அழுந்தூர் திதியன் அக்காளையை அடக்கி வெற்றி கொள்கிறான். ஆனால் அன்னியோ, தம்

குடிக்கும் வேளிர் குடிக்கும் பலநாள் பகையதனால் மணம் உடம்படுதல் இயலாது என மறுத்துவிடுகிறான். இதனால் சினம் கொண்ட திதியன் அன்னிமிஞிலியைத் தன் மனைவியாக்கிக் கொள்வேன் என்று சூளுரைத்துச் செல்கிறான்.

சில காலம் சென்ற பின் திதியன் படையொடு வந்து குறுக்கையை வளைத்துக் கொள்கிறனான். நீடுரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேள் எவ்வி என்னும் வேளிர் குலத் தலைவன் அறங்கள் பலவற்றைக் கூறி, போரைத் தவிர்க்கின்றார். வேள் எவ்வி திதியனிடம் திருமணத்தை நடத்தி வைப்பதாக உறுதி கூறுகின்றார். இந்நிலையில் கூடல் நகரில் இருந்த கோசர் தலைவன் அகுதையும் நெய்தலங்கானலில் இருந்த கோசர் தலைவன் சினவாழியும் சோழ நாட்டை அடிமைப்படுத்த முனைகின்றனர். அதே நேரத்தில், தமிழ் வேந்தரை ஒற்றுமைப்படுத்தும் எண்ணமுடைய வேள் எவ்வியை ஒழித்து விடவேண்டுமென அகுதை சூழ்ச்சி செய்கின்றான். இச்சூழ்ச்சியின் படி திதியனைப் பாண்டிய நாட்டு எல்லையில் செல்லுமாறு செய்து, தனிமைப் படுத்தப் பட்ட வேள் எவ்வியைப் புலர்காலைப் பொழுதில் வந்து தாக்கி, வஞ்சனை செய்து வேள்எவ்வியை அகுதை கொன்று விடுகிறான். அன்னிமிஞிலியின் வெண்காற்காரி கோசர்களுக்குரிய பயிரை மேய்ந்தது. அதனைப் பற்றி கட்ட வந்த இரண்டு பேரை அவ்வெண்காற் காரி குற்றிக் கொன்று விட்டது. இதனால் சினமுற்ற கோசர், அன்னியின் ஆ காப்பாளன் தத்தனைக்கொன்று ஆனிரையைக் கவர்ந்து சென்றனர். பணிந்து போவதே தக்கது என்று கருதிய அன்னி கோசரிடத்து குற்றம் பொறுத்து ஆனிரைகளை விடுவிக்குமாறு வேண்டினான். ஆனால் வஞ்சனை எண்ணம் கொண்ட கேசர், அன்னியையும் உடன் வந்த இருவரின் கண்களையும் களைந்து விரட்டினர். இதனை கண்ட அன்னிமிஞிலி கடுஞ்சினம் கொண்டு, கண்களை களைந்த கோசரைப் பழிவாங்காது, கலத்தில் உண்ணேன்: மாற்றுடை உடுத்தேன்: பூம்புனல் ஆடேன்: தேமலர் சூடேன் எனச் சூளுரைக்கின்றாள்.

இந்தசமயத்தில் பாண்டிய நாட்டு எல்லையில் இருந்து மீண்ட திதியன் எவ்வி கொல்லப்பட்டதையும் அன்னி கண் பறிக்கப்படட்ட நிகழ்வுகளை அறிகின்றான். அன்னிமிஞிலியின் போர் முயற்சிகளை மாற்றுருவத்தில் கண்காணித்து வருகின்றான். அன்னிமிஞிலியைச் சந்தித்து, உன்னுடைய போர் முயற்சியைக் கைவிட்டு விடுக என வேண்டுகிறான். நானே உன் சூளுரையை நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறுகிறான். திதியன் சோழ மன்னன் இளஞ்சேட் சென்னியின் உதவியோடு கூடல் நகரையும் நெய்தலங்கானலையும் முற்றுகையிடுகிறான். அகுதை, பாண்டிய மன்னன் மற்றும் சினவாழி ஆகியோரின் உதவிக் கிடைக்காமையால் தவிக்கின்றான். கதக்கண்ணனும் சினவாழியும் கோட்டையை அடைத்து வெளியே வராமையால் திதியன் கோட்டைக்கு எரியூட்டுகிறான். கோசர்கள் கூண்டோடு அழிக்கப்பட்டனர். வேறு வழியில்லாத அகுதை, சோழ மன்னன் சென்னியிடம் பணிந்தான். தன் சூளுரை நிறைவேறிய களிப்பில் அன்னிமிஞிலி பூம்புனலாடித் தேமலர் சூடி, திதியன் முன் வருகிறான். தன் வீரத் தோள்களுக்கு அவளை மாலையாக்கித் திதியன் மகிழ்ந்தான்.

கதை மாந்தர்கள்

அன்னி	குறுக்கையில் வாழ்ந்த ஆயர் குலத்தலைவன்
திதியன்	அழுந்தூர் வேளிர் தலைவன்
வேள் எவ்வி	நீடுரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வேளிர் குலத்தலைவன்
அகுதை	கூடல்நகரில் வாழ்ந்த கோசர்களின் தலைவன்
சினவாழி	நெய்தலங்கானலில் வாழ்ந்த கோசர்களின் தலைவன்
கதக்கண்ணன்	சினவாழியின் இளவல்
இளஞ்சேட்சென்னி	சோழப் பேரரசன்
வெள்ளெருக்கிலையார்(ம)குடவாயிற்கீரத்தனர்	புலவர்கள்
தத்தன்	அன்னியின் ஆ காப்போன்
கீரன்	அன்னியின் நண்பன்
அன்னிமிஞிலி	அன்னியின் மகள்
மாதிரி	அன்னிமிஞிலியின் தோழி
ஏலங்குழலி	வேள் எவ்வியின் மனைவி
மற்றும்	அமைச்சர்கள், காவலர்கள், ஏவலர்கள், கண்டோர், வழிப்போக்கர், படைத்தலைவர்

நாடகத்தின் சிறப்புகள்

இந்நாடகம் வரலாற்று வழி நாடகமாகக் கருதப்படுகிறது. சங்கப் பாடல்களில் காணப்படும் அகப் புற மரபுகள் இந்நாடகத்தில் விரவி காணப்படுகின்றது. முல்லை நில மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. நெய்தல் நிலக் குடியினராகக் கதையில் இடம்பெறும் கோசர் குடியினர் வந்தேறியவர் ஆவார். தமிழினத்தின் ஒற்றுமையைப் பேசும் வேள் எவ்வி என்னும் கதைமாந்தர், நாடகக் கதையின் அவலச்சுவையினை மிகுவித்து உணர்ச்சியூட்டும் பாத்திரமாகத் திகழ்கிறார். திதியன் தன் காதலை, பாங்கனிடம் வெளிப்படுத்தும் இடத்தில் பாங்கன் வினாவலும் தலைவன் உற்றது உரைத்தலும் ஆகிய அகப்பொருள் மரபுகள் வெளிப்பட்டுள்ளன. போர்க்கருவிகளின் வருணைகள், போர்க்கள வருணனையும் புறநானூற்றுக் காலத்தை நினைப்பூட்டுகின்றன.இந்நாடகக் கதையின் மையக்கருத்து அகநானூற்றின் 262- ஆம் பாடலிருந்து வெளிப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் அகநானூற்றின் 45,115 126,145,196, 266, 366 ஆகிய பாடல்களில் இடம்பெறும் செய்திகள் நாடகத்தின் புனைகதைக்கு உறுதுணையாக இருக்கின்றன. கருவிகள் அனைத்தும் போர் உருவாக்கம் பெறுவதற்கன்று எழுகின்ற போரைத் தடுப்பதற்குப் பயன்பட வேண்டும். போர்க்கருவிகள் செய்வதற்குப் பயன்படும் செல்வத்தினைப் பயன்படுத்தி உழுபடைகள் செய்து நாட்டைக் காக்க வேண்டும் என்று கதைமாந்தர்களின் வழியே ஆசிரியர் பரிந்துரைக்கின்றார். போரற்ற சமுதாயத்தைக் காணவிழையும் பாங்கினை இந்நாடகம் திறம்பட எடுத்துரைக்கிறது. இதுவே நாடகத்தின் உயிர்நாடியான கருத்தாகவும் அமைகிறது.

விழாக்கள்

பரந்துபட்ட மக்கள் அனைவரும் ஒன்றுகூடி எடுக்கும் நிகழ்வினை விழா என்கிறோம். விழவு, சாறு, திருவிழா, பண்டிகை, நோன்பு, திருநாள் என விழாவிற்கு வேறுபெயர்களாகச் சுட்டுவர். "விழாக்கள் உடலுக்கு ஓய்வும், உள்ளத்திற்கு இன்பமும் தரவல்லன. எனவே மக்கள் விரும்பி ஏற்றுக்கொண்டாடுவதால் விழா என்று அழைக்கப்படுகிறது. விழா எனும் சொல் விழை என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது. இதற்கு விருப்பம், பற்று ஆகியபொருள்கள் உள"(கா.மு.பாபுஜி: பக்.5) எனக் கூறுகின்றார்" மனிதன் வேட்டையாடினான். ஓய்வாக இருந்தபோது தன் களைப்பைப் போக்க ஆடிப்பாடினான். இதன் பயனாக விழா கொண்டாடி மகிழ்ந்தான். கிழமைக்கு ஒருநாள் விடுமுறை எடுத்துக்கொண்டான். சங்ககாலத்தில் தைந்நீராடல், கார்த்திகை விழா, ஓணவிழா, இந்திரவிழா, உள்ளி விழா, பூந்தொடை விழா முதலிய விழாக்கள் குறிக்கின்றன"(பா.இறையரசன்: பக்.238) என்று குறிப்பிடுகின்றார்.

இந்திர விழா

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் கொண்டாடிய விழாக்களில் முதன்மையானது இந்திர விழா என்பதாகும். மருத நிலத்தின் தெய்வமாக வணங்கப்பட்ட கடவுள் இந்திரனுக்கு அந்நிலத்துக்குரிய பெரும் பொழுதான இளவேனில் பருவத்தில், இந்திரனை வழபடுவதற்கு எடுக்கப்பட்ட விழா இந்திரவிழா எனப்பட்டது. மழையின் கடவுளான இந்திரனை வணங்கி, உழவுத் தொழிலுக்குத் தேவையான மழையை வேண்டிப் பெறுவதே இந்திரவிழா கொண்டாடியதன் நோக்கமாயிற்று. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூரெடுத்த காதையிலும் மணிமேகலையில் விழாவறைகாதையிலும் இந்திரவிழா பற்றிய குறிப்புகள் உள்ளன. இவ்விழா 28 நாள்கள் நடைபெற்றது, இந்திர வழிபாடு மற்றும் இந்திர விழா எடுக்கும் வழக்கம் பண்டைத் தமிழர்களிடையே நிலவிய செய்தியினைப் பற்றிய முதல் குறிப்பு , எட்டுத்தொகை நூலான ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ளது. ஐங்குறுநூறில் மருதத் திணையைப் பாடும் ஓரம்போகியார் தலைவி கூற்றாக இடம்பெறும் "இந்திர விழவில் பூவின் அன்ன" (ஐங். 62) என்னும் பாடல் சான்று பகிர்கிறது. அன்னிமகள் நாடகத்தில் முதற் அங்கம், முதற்களத்தில் அன்னி, அன்னிமிஞிலி, மாதரி, திதியன், பாங்கன் ஆகியோர் புகார் நகரில் இந்திரவிழாவினைக் காண்பதாகக் காட்சியமைக்கப்பட்டுள்ளது. "இந்திரன் விழாவிற் கெழுந்ததால் அவனுடன்/ வந்ததோ அவன்றன் வண்ண கார்முகம்/ எனச்சொலு மாறு வண்ண எழினிகள்/ நிரைத்துக் கட்டிய நெடுங்கூடாரம்/ விளங்கித் தோன்றும் விழியுணா உண்ணுக"(ஆ. பழநி: பக்.7) "இந்திர விழவின் எழில் நலங் காணிய/ வந்தஅந் நாளில் வன்படைக் கருவிகள்/அங்காடி மருங்கில் ஆருயிர் தளிர்ப்பக் ஃகண்டுளே மன்றே என அவன் கழறினான் "(ஆ. பழநி: பக்.30) என்னும் அடிகள் இந்திரவிழா பற்றிய செய்திகளைத் தெளிவுப்படுத்துகின்றன. புகார்த்துறையில் நடைபெற்ற இந்திரவிழாக் கோலங்கள், அங்காடிகள், குரவையாட்டங்கள், இசைவாத்தியங்கள், நறுமணங்கள், பூவிலைத் தோரணங்கள், மக்களும் மக்களின் மனங்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வெற்றி விழா

பகை மன்னனின் பொருட்டு எழுந்த போரின் விளைவாக கிடைக்கும் வெற்றியினை, பண்டைத்தமிழ் மக்கள்

கொண்டாடினார்கள். "இன்று நாம் காணும் இவ்வுலகமே மக்கள் இனம் மற்ற இயற்கையோடு ஓயாது நடத்திய போராட்டத்தின் உறுபயன் ஆகும்." (கா.கோவிந்தன்:பக்7) வெற்றிப்பெற்ற மறவனின் வில்லினை வைத்துக் கொண்டாடும் விழவாகும்., தங்களின் வீரத்தை மக்கள் முன்னிலையில் வெளிப்படுத்துவார்கள. தம்மீது பட்ட அடியால் வடுவழுந்திய நெற்றியையும் உடையவர்கள் மறவர்கள். "மள்ளர் குழிஇய விழவினானும்" (குறும்.31:1) என்று குறுந்தொகை கூறுகிறது. போரிலே வெற்றி கண்ட வில்லினைச் சிறப்பிக்கும் பொருட்டு வீரர்கள் கூடி எடுக்கும் விழாவாக அமைந்துள்ளது.

அகுதையை எவ்வி அரிமண வாயிலில் வென்றமையால் வெற்றிவிழாக் கொண்டாடப்படுகிறது. 'தோரணம் நாற்றுமின் தொங்கல் சாற்றுமின்/போரடு தானைப் புரவலற் கிரிந்த/ வல்வேல் அகுதையின் வயப்படை மான/ மென்கால் துரக்க மேல்வருந் தோறும்/ அழிவுறும் வண்ணம் அகிற்புகை ஆக்குமின்/எழில்படு தூணெலாம் ஓவியம் ஏற்றுமின்/ திருக்கிலா நல்லறம் தேர்ந்தறி புலவோர்/ இருக்கைகள் முறைமுறை எழிலுறப் புனைமின்."(ஆ.பழநி: பக்.16)'பொன்வினை மலிந்த புகாரறு சிறப்பின்/ மன்னுடை இருக்கை மலரணை சாத்துமின்/ நன்மண மலரிதழ் நன்கனம் தூவுமின்/இன்மண நன்னீர் எங்கணும் தெளிமின்" (ஆ. பழநி: பக்.17) 'ஆழியைக் கலக்கி அவற்றி அமிழ்துறை/தாழியைக் கொணர்ந்த தறுகணர் களத்தில்/ ஆற்றிய வெல்லாம் அரும்படைத் தலைவர்/ போற்றி மொழிகதில்: புரையிலா மறவரும்/ வென்றிவண் வந்த வீரரும் உண்டு/ வென்றிக்குத் தம்முயிர் விடுத்தாரும் உண்டு/ மறத்துறை சிறந்து மாண்டவர்க கெல்லாம்/ திறத்தினுக் கேற்பச் சிறப்புச்செய்தல்/ அரசியல் நெறியாம் ஆதலின் மொழிக" (ஆ. பழநி:பக்.19) என்னும் அடிகள் வெற்றி விழா நிகழ்வுகளைக் காட்சிப்படுத்துகின்றன. அறவோர்க்கும் மறவோர்க்கும் சிறப்புச் செய்த நிகழ்வுகளையும் மன்னனைப் போற்றிப் புகழ்ந்ததையும் புலவர்.ஆ.பழநி, நாடகத்தில் கவிநயத்தோடு எளிமையாகப் படைத்திருக்கிறார்.

ஏறுதழுவுதல் விழா

'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்ஃபுல்லாளே ஆய மகள்ஃஅஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லாதஃநெஞ்சிலார் தோய்ப்பதற்கு அரிய - உயிர்துறந்துஃநைவாரா ஆய மகள் தோள்" (கலி.முல்லை.103 63-64) என ஏறுதழுவும் இளைஞர்களைப் பண்டைத்தமிழ்ப் பெண்கள் விரும்பி மணம் முடித்தமையை முல்லைக்கலி குறிப்பிடுகின்றது. பழந்தமிழ் நூலான, மலைபடுகடாம் நூலிலும் (330-335), பட்டினப்பாலையிலும், சிலப்பதிகாரத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகள் உள்ளன. தமிழர்களின் திருமண வாழ்க்கையோடு தொடர்புடைய ஏறு தழுவுதல் சிறந்த பண்பாட்டுக் கூறாகும்.

அன்னிமகள் நாடகத்தில் ஏறுதழுவுதல் நிகழ்வு விரிவாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஏறுதழுவதற்குக் காளைகள் கொண்டுவரப்பட்டன. தழுவோரும் காண்போரும் குழுமியிருந்தனர். மகளிர் பரண்கள் மீது அமர்ந்து ஏறுதழுவுதல் நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.' தன்னிழல் காண்டொறும் சினத்தால் தரையினைப்/ புண்டிசெயும் ஏறுகள் புகும்;அதன் வலியினை/ அடக்கியும் இமிலிடை அணைந்தும் வெற்றியின்/ தொடக்கினை எய்தினோர் துப்புடைக் கோட்டுக்/ காளைக் குரியயவள் கடிமலர் கமழும்ஃ தோளுக் குரியவர் ஆகுவீர்" (ஆ. பழநி: பக்.33) 'ஏற்றினைத் தழுவி எதிரிலா நல்லிசைப்/ பேற்றினைப் பெறூஉம் பீடுசால் தறுகணீர்/ மறத்தினைக் காணவும் மரபுநெறி வழாநற் / றிறத்தினைக் காணவும் திரண்டுள சான்றீர்" (ஆ. பழநி: பக்.115) "ஏற்றை அடக்கிமேல் அவனெங் கணவனெனப்/போற்றுவர் பெண்டிர் மிஞிலிக்கும் பொருந்தும்,/ பகையெனும் கனலால் பைங்கொடி மிஞிலியின்/ நகையினை எரிக்க நண்ணினை கொல்லோ?"(ஆ. பழநி: பக்.115) ஆகிய செய்யுளடிகள் ஏறுதழுவுதலை வீரத்தோடும் அறத்தோடும் வெளிப்படுத்துகின்றன.

முடிவுரை

- அன்னிமகள் நாடகத்தில் மூன்று விழாக்கள் பற்றிய விரிவான செய்திகள் உள்ளன. இம்மூன்று விழாக்களும் தமிழரின் பண்பாட்டின் மிக முக்கிய கூறுகளாகும்.
- தமிழரின் வீரப் பண்பாட்டின் அடையாளமாக ஏறுதழுவுதல் மற்றும் வெற்றி விழா பற்றியும் மகிழ்ச்சிக் குறியீட்டின் அடையாளமாக இந்திர விழா பற்றியும் பதிவுகள் உள்ளன.
- இப்பதிவுகள் யாவும் சங்க இலக்கியச் சாயலோடும் கற்பனை நயத்தோடும் புனையப்பட்டுள்ளன.
- அறத்தின் நாயகனாகவும் தமிழரின் இன ஒற்றுமையின் தூதுவனாக வேள் எவ்வி என்னும் கதாப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. எதிர்மறை பாத்திரங்களாக அகுதை, சினவாழி, கதைக்கண்ணன் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

- பெண்ணின் வீரத்தினை வெளிப்படுத்தும் விதமாக, அன்னிஞிமிலி என்னும் கதைமாந்தரை இலக்கியப் பண்போடு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
- திதியன், அன்னிஞிமிலி என்னும் இரு கதைமாந்தர்களும் சங்க இலக்கிய அகமாண்புகளை அறத்தோடு நாடகத்தில் இடம் பெற்றுள்ளனர்.

துணை நூற் பட்டியல்

1. இறையரசன், பா. தமிழர் நாகரிக வரலாறு, பூம்பூகார் பதிப்பகம், சென்னை- 600 108, முதற் பதிப்பு 1993
2. கோவிந்தன், கா. பண்டைத் தமிழர் போர் நெறி, தமிழ்த்தாய் பதிப்பகம், சென்னை -64, முதற்பதிப்பு 2003
3. பழனி, ஆ. அன்னிமகள்(செய்யுள் நாடகம்), எழில் வெளியீட்டகம், 48, அம்பலக்காரர் தெரு, காட்டுத் தலைவாயில், காரைக்குடி-1, முதற்பதிப்பு 1978
4. பாபுஜி, கா.மு. சிலப்பதிகாரத்தில் விழாக்கள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-108, முதற் பதிப்பு 1991
5. சங்க இலக்கியம் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், அம்பத்தூர், சென்னை-600098, மூன்றாம் பதிப்பு 2007

Funding

No funding was received for conducting this study.

Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.